**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த

வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது சபையினது பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறைச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 150 மில்லியன் ஆன 6 மாதம் மற்றும் 8 மாதங்களான 3 நிலையான வைப்புக்கள் முதலீடுகளாகக் கணக்கிடப்பட்டதன் காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் அந்த அளவினால் மிகைப்படுத்தப்பட்டிருந்தன. | சில முதலீடுகள் ஒரு வருடத்திற்கும் குறைவான முதிர்வு கால வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டாலும், அவை மீள் முதலீட்டு அடிப்படையில் முதலீடு செய்யப்பட்டுள்ளமையால் அனைத்து முதலீடுகளும் முதலீடுகளின் கீழ் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம், பணம் மற்றும் பணத்திற்கு சமமானவையாக கணக்கீடு | | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட வேண்டிய ரூபா 130 மில்லியன் ஆன 3 மாத கால 3 நிலையான வைப்புக்கள் முதலீடுகளாகக் கணக்கிடப்பட்டதன் காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் அந்த அளவினால் மிகைப்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (இ) | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு பெறப்பட்ட ரூபா 191.32 மில்லியன் ஆன அனுமதிப்பத்திர வருமானம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் பிரகாரம் அனுமதிப்பத்திர காலப்பகுதிக்குரிய வருமானமாக அங்கீகரிக்கப்படாமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் அறவிடப்படும் அனுமதிப் பத்திரக் கட்டணம் ஒரு தடவைக்கான கட்டணமாகும். இந்த அனுமதிப் பத்திரக் கட்டணம் பண்டமாற்று பரிவர்த்தனையொன்று அல்ல. எனவே, அது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கிடப்பட வேண்டும் என்பதால், பணம் வசூலிக்கப்படுகின்ற ஆண்டில் வருமானமாக கணக்கிடப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் பிரகாரம் அனுமதிப்பத்திர வருமானமானது அனுமதிப்பத்திர காலப்பகுதிக்குரிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் புத்தகப் பெறுமதி பூஜ்ஜியமான கிரயம் ரூபா 355 மில்லியன் நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 263 செயலற்ற உபகரண விடயங்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மேற்படி (ஈ) பதிலுடன் தொடர்பானது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புனரீன் சூரிய மற்றும் காற்று சக்தி செயற்திட்டத்திற்கான காணியை கையகப்படுத்துவதற்கு தேவையான இழப்பீடு வழங்கப்படுவதற்கு புனரீன் பிரதேச செயலகத்தில் வைப்பிலிடப்பட்ட ரூபா 46.75 மில்லியன் ஆன முற்பண தொகையொன்று | புனரீன் செயற்திட்டத்திற்கான காணியை கையகப்படுத்துவதற்கு நட்டஈடு வழங்குவதற்காக வழங்கப்பட்ட ரூபா 46.75 மில்லியன் அந்த வருட வருமானத்திற்கு எதிரான செலவீனமாக இருந்ததால் | மீளாய்வாண்டின் ஹ இறுதி வரை உரிய இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்படாததால், அவை முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அந்த அளவினால் மீளாய்வாண்டின் இலாபம் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவீனமாக கணக்கிடப்பட்டது. இங்கு எதிர்பார்க்கப்படும் மொத்த செலவு ரூபா 187 மில்லியன் என்பதுடன், ஒரு வருடத்தில் மொத்த செலவினங்களைச் செய்தால், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் பெரும் நட்டமொன்றை ஏற்படுத்தும் என்பதால், பணம் செலுத்திய ஆண்டில் வருமானத்திற்கு எதிரான செலவினமொன்றாக அது பதிவு செய்யப்பட்டது. | |
| (ஆ) | புனரின் செயற்திட்டத்திற்காக, முன்னைய ஆண்டுகளில் அதிகாரசபையால் செலவிடப்பட்ட ரூபா 23.7 மில்லியன் ஆன ஆய்வுக் கட்டணங்கள் மற்றும் செயற்திட்டச் சாத்தியக்கூறு ஆய்வு செலவுகள் செயற்திட்டச் செலவுகளாகக் கணக்கிடப்படாமல் நடைமுறை வேலைகளாக கணக்கிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் தக்கவைக்கப்பட்ட வருமானம் அந்த அளவினால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2009 ஆம் ஆணடில் அம்பாந்தோட்டை சூரிய மின் நிலைய காணியைச் சுற்றி கட்டப்பட்ட மின்சார வேலி மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மின்வேலி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | அனைத்து நடைமுறையல்லாச் சொத்துக்களும் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ஒரு சிறிய நீர்மின் நிலையத்திற்காக 2020 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் குத்தகைக்கு விடப்பட்ட அரசாங்க காணியொன்றுக்காக பெறவேண்டிய ரூபா 780,000 ஆன குத்தகை தொகை வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது 2023 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் திருத்தப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | பெறவேண்டிய தொகை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | புனரீன் சூரிய மற்றும் காற்று சக்தி செயற்திட்டம் மற்றும் மன்னார் காற்று சக்தி செயற்திட்டம் | செலவினங்களை திருப்பிச் செலுத்துவதற்காக இந்திய வெளிநாட்டு முதலீட்டு | வாடிக்கையாளருடன் முறையாக ஒப்பந்தங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | (இரண்டாம் கட்டம்) ஆகியவற்றிற்காக அதிகாரசபையால் 2017 ஆம் ஆண்டு முதல் செலவிடப்பட்ட ரூபா 261.7 மில்லியன் செலவினங்களை திருப்பிச் செலுத்துவதற்காக அதிகாரசபையால் 2022 நவம்பர் 8 ஆம் திகதி அந்தந்த செயற்திட்டங்களின் தேர்ச்சியாளர்களாக இருந்த இந்திய கம்பனிக்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அது திருப்பிச் செலுத்தப்படவில்லை. மேலும், செலவினங்களை திருப்பிச் செலுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட கம்பனியுடன் முறையான ஒப்பந்தம் எதுவும் எட்டப்படவில்லை என்பதுடன் அக்கம்பனியிடமிருந்து பெற வேண்டிய தொகை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்கான விலைப்பட்டியல் (Invoice) எதுவும் வழங்கப்படாததால், 2022 நிதிக்கூற்றுக்களில் இது வருமானமாக அங்கீகரிக்கப்படவில்லை. | மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் செயற்திட்டத்திற்கான பெற வேண்டிய தொகை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கம்/வெளிப்படுத்தல் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 700 மெகா வோட்களுக்கு விண்ணப்பித்திருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டத்திற்காக அதிகாரசபையால் 600 மெகா வோட்களுக்கு அதாவது ரூபா 30 மில்லியன் குறைவாக பதிவுக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. மத்திய மின்கம்பத்துடன் இணைப்பதற்கு தேவையான கொள்ளளவானது இலங்கை மின்சார சபையால் உறுதிப்படுத்தப்படாத காரணத்தினால அவ்வாறு கட்டணம் குறைவாக அறவிடப்பட்டதுடன், அறவிடப்பட வேண்டிய எஞ்சிய பதிவுக் கட்டணங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | அதன் பிரகாரம் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் எரிசக்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டபோது எரிசக்தி அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்கு மேலதிகமாக விண்ணப்பம்/பதிவுக் கட்டணத்தின் நிலுவைத் தொகை இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய தொகை பதிவுக் கட்டணங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 35 ஆம் | அதிகாரசபையால் | புதுப்பிக்கத்தக்க | ஆற்றலை ஒழுங்குமுறை |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 5(ஔ) பிரிவு | கருத்து முரண்பாடு (conflict of interest) உருவாக்கப்பட்டமையால் 21.3 மெகா வோட் திறன் கொண்ட 5 மின் உற்பத்தி நிலையங்களுக்கு அதிகாரசபையின் பெயரில் எரிசக்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களில், 3 செயற்திட்டங்களுக்கு ரூபா 1.6 மில்லியன் விண்ணப்பக் கட்டணம் மற்றும் 10 மெகா வோட் செயற்திட்டத்திற்கு ரூபா 5.75 மில்லியன் அனுமதிப்பத்திரக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. | ஊக்குவிப்பதற்காக சரியான நேரத்தில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் அதிகாரசபையால் 5 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் , இலங்கையில் அத்தகைய செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்படாத காரணத்தால் மற்றும் அதற்காக பெருமளவு மூலதனச் செலவொன்று ஏற்படுவதாலும் தனியார் துறை இதற்கு நேரடியாகப் பங்களிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. அதிகாரசபையின் இலக்குகளை அடைவதற்கு நிறுவனத்தின் செயற்பாடுகள் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதால், இதற்காக ஒரு முன்னோடி செயற்திட்டத்தை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அதற்கான மூலதனச் செலவுகளைச் செய்வதற்கான இயலுமை அதிகாரசபைக்கு இருக்கவில்லை. எனவே, சட்டத்தின் 5 (க) இன் படி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களின்படி, இதற்காக தனியார் துறையுடன் கூட்டுத் திட்டத்தின்படி இந்த செயற்திட்டங்கள் அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டது. | விவகாரங்களுடனான முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் மற்றும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு முறையான விண்ணப்ப மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) | II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியல்லாத பங்களா காப்பாளர் பதவிக்கு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தனியார் கம்பனியொன்றின் மூலம் ஒப்பந்த | இது சிறீலங்கா எனர்ஜிஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு என்பதால், அந்த நிறுவனத்தின் முறைப்படி பணம் செலுத்தப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் ஊழியர் ஒருவர் பணியமர்த்தப்பட்டு, அவருக்கு மீளாய்வாண்டில் ரூபா 913,239 ஆன சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | XXXIII ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு | அதிகாரசபையால் காணி குத்தகைக்கான வரி பத்திரத்தின் வரைவு தயாரிப்பதற்காக சட்டமா அதிபரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுடன் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பத்திரத்தின் குத்தகைக் காலம் இரண்டு வருடங்களாக இருந்த போதிலும், சிறிய நீர் மின் நிலையமொன்றுக்கான காணியொன்று குத்தகைக்கு விடப்பட்டபோது 20 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 18 (4) இன் கீழ், செயற்திட்டங்களுக்கான இறுதி அங்கீகாரம் 20 ஆண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்திற்கான காணியின் குத்தகை தொடர்புடைய காலத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதால் ஒப்பந்தம் 20 ஆண்டுகளுக்கு கையொப்பமிடப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதடன் அதிகாரச் சட்டத்தில் நேரடி ஏற்பாடுகள் இல்லாததால், சட்டமா அதிபர் திணைக்களத்தி னால் அங்கீகரிக்கப்பட்ட 2 ஆண்டு குத்தகை காலத்தை 20 ஆண்டுகளாக திருத்தம் செய்வதற்கு மீண்டும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 751 மற்றும் 753 | சியாம்பலாண்டுவ உட்பட பல பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு விநியோகிக்கும் நோக்கில் அதிகார சபையினால் ரூபா 3.84 மில்லியன் செலவிடப்பட்டு 2022 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 20,000 LED மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டபோதிலும் அந்த மின்குமிழ்கள் கையிருப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டு முறையாக பொறுப்பான அதிகாரிகளிடம் வழங்கப்படவில்லை. அத்துடன் அந்த மின்குமிழ்கள் மக்களுக்கு விநியோகிககப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த விவகாரத்திற்கு தேவையான விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு உள்ளக விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். | நிதிப்பிரமாணக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உள்ளக விசாரணைகள் உடனடியாக முடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 திசம்பர் 31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட வழிகாட்டி | அதிகாரசபை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு அனைத்து சொத்துக்களையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டு விளைவுகள் ரூபா 225.8 மில்லியன் ஆன மிகையொன்றாக இருந்ததுடன இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 181.8 மில்லியன் ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 44 மில்லியன் ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களுக்கான விண்ணப்பக்கட்டண வருமானம் ரூபா 182 மில்லியனால் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது. அத்துடன் செயற்திட்ட செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்படும்போது ரூபா 148.5 மில்லியனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டுத் திட்டமொன்றின் கீழ் அதிகாரசபைக்கு பெறப்பட்ட பணத்தில் இருந்து 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய PF/PE/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3.1 மில்லியன் ஆன தொழில்சார் கொடுப்பனவு மீள அறவிடப்பட வேண்டுமென மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் 2012 திசெம்பர் 03 ஆம் திகதிய PE/IA/22/VOL.II ஆம் இலக்க கடிதத்தில் அதிகாரசபையின் தலைவருக்கு உத்தரவிடப்பட்டிருந்தாலும், 2023 செப்டெம்பர் வரை அதற்கான பணம் அறவிடப்படவில்லை. | அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பிரகாரம் மீள அறவிடப்படுவதற்கு அந்த திட்டத்தில் குறிப்பாக ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021/07/27 ஆம் திகதிய SMRC/FIN/SLSEA/2021 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் விரைவில் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2007-2009 ஆண்டுகளில், 3 மின்சார வாகனங்களை தயாரிப்பதற்காக அதிகாரசபையால் தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 7.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 7 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவிற்கு இது தொடர்பாக அதிகாரசபையால் தவறான தகவல் வழங்கப்பட்டிருந்ததுடன் இப்பணியில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், இது தொடர்பாக உண்மை நிலவரத்தை பிரதான கணக்கீட்டு அலுவலர் மூலம் பொது முயற்சிகள் குழுவிற்கு தெரிவிப்பதற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலைமையில் 2013 ஜனவரி 4 ஆம் திகதி நடாத்தப்பட்ட குழுக் | இத்திட்டம் தொடர்பான பிரச்சினை தேசிய நடுவர் மன்றத்திற்கு (National Arbitration Council) அனுப்பப்பட்டு அங்கு நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் மின்சார வாகன தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான ஒரு கருவியாக ஒரு மாதிரியை அதிகாரசபைக்கு பெற்றுக் கொள்வதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சபையால் 2022.11.21 ஆம் திகதி முடிவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் இந்நடைமுறை செயற்படுத்தப்படும். | முறையற்ற கொடுப்பனவுகளுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பதற்கும், இந்த கொடுக்கல் வாங்கலின் உண்மையான நிலைமையை பொது முயற்சிகள் குழுவிற்கு தெரிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2023 செப்டெம்பர் வரை குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்படவில்லை. | | |
| (இ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஒவ்வொரு பிரதேசத்திலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் சாத்தியக்கூறுகளின்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும், அதிகார சபை நிறுவப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் 2023 செப்டெம்பர் வரை அவ்வாறான திட்டமொன்று வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. | பொதுமக்களின் கருத்தின்படி முடிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க அபிவிருத்தி திட்டம், மூன்று மொழிகளிலும் 2021 நவம்பர் 26 அன்று செயலாளர், சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தேவையான அமைச்சரவையின் அங்கீகாரததைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்து. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 13 சிறு நீர் மின் செயற்திட்டங்களுக்காக, சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் 2011-2022 காலப்பகுதியில் 11.4 ஹெக்டெயர் காணி அதிகாரசபையால் காணி கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட போதிலும், சட்டத்தின் 32 ஆம் பிரிவின்படி, அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட காணிகள் முறையாக குத்தகைக்கு விடப்பட்டு அல்லது ஒப்படைக்கப்படடு ஆண்டுக்கான வரிப்பணம் வசூலிக்கப்படவில்லை. | அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்ட 45 காணித்துண்டுகளில் 16 காணித்துண்டுகள் சரியாக குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 29 காணித்துண்டுகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமையியல் விசாரணைகள் முடிக்கப்பட்டதன் பின்னர் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செயயப்பட்டதன் பின்னர் நிலுவை வரித் தொகையுடன் உரிய வரிப்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக காணிகள் கையகப்படுத்தப்பட்டவுடன், அந்த காணிகள் அரச நிலமாக பதிவு செயயப்பட்டு அன்றைய திகதி முதல் அரசிற்கு வரி வசூலிக்கும் வகையில் உடனடியாக வரி ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையால் 2007 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் | கருத்துரை வழங்கப்படவில்லை. | தகுதியுடைய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் |

| | | |
|---|---|---|
| ஆண்டு வரை 6,128 மெகாவோட் திறன் கொண்ட 1,268 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களுக்கு ரூபா 280 மில்லியன் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டாலும், 2023 ஆகஸ்ட் வரை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு எரிசக்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. மேலும், 2022 ஜனவரி 04 ஆம் திகதிய 2261/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆவணங்களில் குறைபாடுகள் உள்ள விண்ணப்பதாரர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் தற்காலிக பதிவு இரத்து செய்யப்படுவதற்கும் மற்றும் ஆவணங்களை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக எரிசக்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | எரிசக்தி அனுமதிப்பத்திரங்களை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் குறைபாடுள்ள விண்ணப்பதாரர்களின் தற்காலிக அனுமதிகளை இரத்து செய்து மாற்று விண்ணப்பதாரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். |

### 3.3 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையால் தலைமை அலுவலகத்திற்கான எரிசக்தி செயற்திறன் கொண்ட கட்டிடமொன்றை கட்டுவதற்கு அரச பெறுகை வழிகாட்டி 4.3 இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு மற்றும் அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை. கட்டிடத்தின் வடிவமைப்பு திட்டங்களுக்காக 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 23.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2023 செப்டெம்பர் வரை அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்படாததுடன் அதன் காரணத்தால் நிர்மாணப்பணிகளை தெடங்குவதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. அதன்படி, தற்போது | அமைச்சின் வழிகாட்டுதலின் பிரகாரம் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தை கொழும்பு நகருக்கு வெளியே நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென செயலாளரினால் செய்யப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இந்த காணி 2015 ஆம் ஆண்டு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்திற்காக 2022.02.18 அன்று அமைச்சரவையில் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. COVID தொற்றுநோய் மற்றும் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய | (i) அரசின் பெறுகை வழிகாட்டுதல்களின்படி, முறையான அங்கீகாரமின்றி பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க கூடாது என்பதுடன் பொருளாதாரமற்ற செலவுகளை மேற்கொண்டமைக்குப் பொறுப்பானவர்களை கண்டறிய வேண்டும்.<br><br>(ii) குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறைகள் அதிகார சபைக்கு பாதகம் ஏற்படாத வகையில் திருத்தப்பட வேண்டும். |

மேற்படி செலவு பொருளாதாரமற்ற செலவொன்றாக மாறியுள்ளது. இதற்காக ரூபா 41 மில்லியன் செலவிடப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 30 வருட குத்தகை அடிப்படையில் பத்தரமுல்ல பிரதேசத்தில் காணியொன்று பெறப்பட்டிருந்தது. குறிப்பிட்ட குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம் 1.8 இன் படி, ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்குள் நிர்மாணத்தை முடிப்பதற்கு தவறியதால், குத்தகை சொத்தின் உரிமை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இந்த திட்டத்தை ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. வரி நிபந்தனைகளை திருத்தம் செய்வதற்காக அதிகாரசபை பணிப்பாளர் குழு பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.